# "மறைசைக் கலம்பகம்"
# யாழ்ப்பாணத்து நீர்வேலிப்
# பீதாம்பரப்புலவர் அருளியது

கணபதி துணை

**source:**

மறைசைக் கலம்பகம்
ஸ்ரீலஸ்ரீ யாழ்ப்பாணத்து நீர்வேலிப் பீதாம்பரப்புலவர் அவர்கள செய்தது.
இஃது அவருடைய மூத்தபுத்திரரும் கொழும்பு இராசசபையிற் பிரதிவக்தரும் ஆகிய முத்துக்குமாரப்பிள்ளை அவர்களால் சிவ. சங்கரபண்டிதர் அவர்கள் செய் காப்புவிருத்தியோடு வண்ணைநகர் மெய்ஞ்ஞானப்பிரகாச யந்திரசாலையில் அச்சிற்பதிப்பிக்கப்பட்டது
விலை சதம்-18
சுபானு வருஷம் புரட்டாதி மாதம்
1883.
----------------------

பிழைதிருத்தல்

| பக்கம் | வரி | பிழை | திருத்தல் |
|---|---|---|---|
| 4 | 19 | என்னவென | என்னனென |
| 4 | 35 | திராசி | தீராசி |
| 7 | 4 | நிலமண்டில | நிலைமண்டில |
| 8 | 14 | திறக் | திருக் |
| 12 | 32 | சையெம் | சையம் |
| 16 | 8 | தவாவா | தவர்வா |
| 18 | 18 | ரூசல் | ரூச |
| 21 | 12 | க்கடா | க்கட |
| 26 | 17 | மருந் | மருஞ் |

உ

சிவமயம்

## சிறப்புக்கவிகள்

ஸ்ரீலஸ்ரீ கீரிமலைச்சிவன்கோயில் அதிபதி கார்த்திகேயக் குருக்கள் அவர்கள் புத்திரர் சிவ-சங்கரபண்டிதர் அவர்களிடத்திலே சம்ஸ்கிருதமுஞ் செந்தமிழும் பயின்றுகொண்டவர் சபாபதிக்குருக்கள் அவர்கள் திருவாய்மலர்ந்தருளியது

பேர்கொண்ட பாவாணர் பெட்புடனாய்ந்
திடவினிதிற் பேசி னானே.
-------

ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலைத் தலையுபாத்தியாயர்
ஸ்ரீமத் அ. குமாரசுவாமிப்புலவர் சொல்லியவை.

சித்திதரு மறைசைநகர்ப் பெருமா னுக்குச்
செய்யதமிழ்ச் சொற்களெனு மலர்க ளாலே
பத்தியெனு நார்கொண்டு கோவை செய்த
பண்பமருங் கலம்பகப்பா மாலை வேய்ந்தான்
நத்தமரும் வயனீர்வை நகரம் வாழ்வோ
னற்றமிழிற் பற்பலநூ னன்கு கற்றோன்
வித்துவநற் சபாபதியைப் பெற்ற தந்தை
வியனுறுபீ தாம்பரன்பா வாணரேறே.

அந்தமறை சைக்கலம்ப கத்தைப் பாரி
லறிஞரெலா முறையினறிந் தன்பி னோத
முந்துசிவ சங்கரபண் டிதனார் காப்பின்
முறைபுரியுந் திருவிருத்தி யதனி னோடு
சந்தமுறத் தந்தனனா லச்சிற் றானே
தாரணியி லவனருளு முதலா மைந்த
னிந்திரனேர் வந்துகொழும் பரசின் வாழ்வோ
னெழிலுறுமுத் துக்குமர விறைவ னன்றே.
-----

ஏழாலைச் சைவப்பிரகாச வித்தியாசாலை உதவி உபாத்தியாயர்
ஸ்ரீமத் சு.சி. சுந்தரம்பிள்ளை சொல்லியது

சீர்திகழ் நீர்வையிற் செந்தமிழ் நூல்பல தேர்ந்துளனிப்
பார்புகழ் நாவலன் பீதாம் பரபதி பண்டுசெய்த
வார்திக ழின்மறை சைக்கொள் கலம்பக மச்சிலிட்டா
னேர்திகழ் முத்துக் குமர னவனரு ளின்சுதனே.
------

நூலாசிரியருடைய மாணாக்கர்கள் சொல்லியவை

ஸ்ரீமத் ச. வீரசிங்க உடையார்

வேதா ரணியத்தின் மேவீ சுரர்தம்மேற்
பீதாம் பரன்சொல் பிரபந்தங் - காதாரக்
கேட்டா லினிய கிளர்வாய் மனக்கினிய
வாட்டா விருவினையும் வந்து.

ஸ்ரீமத் இ. வைத்தியலிங்கபிள்ளை பிரசித்த நொத்தாரிசு

ஆதியந்த மில்லாம லகண்டபரி பூரணமா
மாதியுனை நானறிந்தஞ் சலிபுரிவ தெவ்வணமோ

உலகுயிர்க ளனைத்தையுமுன் னுதவியளித் தொழிப்பதுநின்
னலகிறிரு விளையாட்டென் றாலுனக்குப் புகழாமோ

நாம்பிரம மென்றிகலு நான்முகனா ரணற்குநடு
வாம்பிரம நீயென்றா னின்பெருமைக் களவாமோ.

(இவையாறும் ஈரடித்தாழிசைகள்)

மறைசைக்கலம்பகம்

அரிபிர மரிவட லமரரி லசுரரி ................
லரிபடை யினிலுட லழிவில னெனெவள .........
வரிபதொர் வரமுள வவுணனை யடவய .........
வரிமிகு கயமுக வமலனை யருளினை ..........

அரியய னரிமுத லமரர்கண் முறையிட ...........
வரிகரி முகமுள வவுணர்க் ளொடுமலை ........
யரிமிசை மரமென வணுகசு ரனையட ..........
வரிவிழி தனிலறு முகவனை யருளினை ........

அரிமலர் மிர்கமத மளவிய வளகமு ............
மரிமொழி யெனமொழி யழகிய வதரமு ..........
மரியென வளரிள வணிமுலை களுமுடை ......
யரிகிளர் பரவையி லணுகிமுன் னருளினை .......

அரிதிரி மலையினி லடவியி லுளபல .............
வரிமரை யுழைமுத லளவில தசையினை .........
யரிபலர் கொடுதின மகமகிழ் வொடுசொரி .........
யரியதொல் லெயினன்மு னமுதுசெய் தருளினை ...

(இவைநான்கும் நான்கடி அராகங்கள்)

ஆதிசிவ வரகரவென் றரிபுலியஞ் சலிபுரிய ............
வாதியின்மன் றிடைநடன மாடியருள் புரிந்தனையால் ...

ஆலமணி விழியிரதி யருத்தியுடன் வேண்டவல.........
ராலமர்செய் தழிந்தவனை யன்பினொடு மளித்தனையால்..

தனஞ்சயனிற் றோன்றரிவை தனக்குரிய மணமகனாந்....
தனஞ்சயன்செய் தவமகிழ்ந்து சமம்புரிந்து முதவினையால்..

மணிகிளரும் பணியையவன மாதவர்க ளனுப்பமுன........

மணிகிளரும் பணியாக வயங்குபுயத் தணிந்தனையால்....

(இவை நான்கும் பெயர்த்தும் ஈரடித் தாழிசைகள்)

ஊனுட னுயிருமாய்த் தோன்றி நின்றுமவ் ...........
வூனையு முயிரையு மொழிந்து நின்றனை ...........

விருப்பொடு வெறுப்புமாய் விளங்கி நின்றுமவ் .......
விருப்பையும் வெறுப்பையும் விடுத்து நின்றனை .....

(இவை இரண்டும் நாற்சீரீரடி அம்பத்தரங்கம்)

எழிலுறு நவமணி யிலங்குமா முடியினை.......
யிழிவிலா துயர்ந்தநல் லிடபமாங் கொடியினை..
அழிவிலா முனிவர்க ளனுப்பிய துடியினை......
செழுமைகொள் கிங்கிணி சேர்ந்திடு மடியினை...

(இவைநான்கும் நாற்சீரோரடி அம்பத்தரங்கம்)

தினகர னகையை யுடைத்தனை......
திரையெறி நதியை யடைத்தனை.....
தனுவென மலையை யெடுத்தனை....
தடகரி யுரியை யுடுத்தனை..........
பரியென மறையை நடத்தினை......
பகைவரொ டமர்செய் திடத்தினை....
வரியுறு புலியை யுரித்தனை........
வளரிள நிலவு தரித்தனை..........

(இவை எட்டும் முச்சீரோரடி அம்பத்தரங்கம்)

மண்ணு.......நீ, விண்ணு......நீ
வாயு.........நீ, தேயு..........நீ
கண்ணு.......நீ, மணியு........நீ
கதிரு.........நீ, மதியு....... .நீ
வேத.........நீ, வேள்வி.......நீ
மெய்ம்மை....நீ, பொய்ம்மை....நீ
சோதி........நீ, யிருளு........நீ
துன்ப........நீ, யின்ப.........நீ

எனவாங்கு .. .. தனிச்சொல்

(இவைபதினாறும் இருசீரோரடி அம்பத்தரங்கம்)

வாசமார் நறைமலர் மகிழ்வோடு சொரிவிசு........
வாசமார்க் கண்டனல் வந்தனை புரிந்திடக்.........

காலனை யுதைத்த கதிரெழு முதய................
காலம்வாய் விள்ளுங் கமலநேர் பதத்தோய்.........
பாலனை யரிந்து பரிவுடன் சமைத்தன்.............
பாலருந் தென்று பணிந்திடு தொண்டனுக்..........
கெல்லை யில்வர மீந்தரு ளனந்த.................
வெல்லைநே ரணியொளி யிலங்குமார் பகத்தோய்...
காய்சரு கருந்தியுங் கானகம் வருந்தியுந்...........
தீயின்மே னின்றுஞ் செய்தவம் பயின்று............
மருமகம் புரிந்து மலைநதி திரிந்து.................
மருமலர் சொரிந்து வந்தனம் புரிந்து...............
மடைபய னதனிலுன் னைந்தக் கரத்தையு..........
மிடைவிடா தோதி யேத்துதல் பயனென...........
வுன்னிவந் தடைந்தே னுன்பதாம் புயங்கடந்........
தென்னைநீ காத்தரு ளெம்பெரு மானே............
(இஃது பதினான்கடி நிலமண்டில ஆசிரியச்சுரிதகம்)

மடக்கு-நேரிசை வெண்பா.

மானாக மான வளர்முலையார் மாலகற்றி
மானாக மானவனை வாழ்த்தகமே-மானாகர்
பத்திமறை நாடரிய பாதமருள் வான்மாடப்
பத்திமறை நாட்டார் பரன். (2)

கட்டளைக்கலித்துறை.

பரனேசங் காழிக்கை யாற்கரி யாய்பொன் பனிச்சதபத்
திரநேசங் கொண்டமர் வேதாரணிய செழுங் கனன்மான்
கரநேசங் கற்பச னைத்தீ விழியினிற் காய்ந்தவனே
யரனேசங் கத்திருந் தாயடி யேற்குன் னடிதுணையே. (3)

கலிநிலைத்துறை.

துணையாமெ னக்கஞ்ச நிகரான பொற்றா டுதிக்குங்கருத்
திணையாமல் வீழ்நாள்க ழித்தேனுன் னருள்பார்த்த திறக்கின்றன
னணையாரும் வளைமுத்த நிலவூர வாய்விள்ளு மலர்வாவிசூழ்
பணையார்ம றைக்காட நினையெண்ண லரிதோது டரிசாரவல்லார். (4)

அறிசீர்க்கழிநெடிலடி ஆசிரியவிருத்தம்.

வல்லானை முகத்தானை மயிலானைப் பயந்தானை வணங்கார் நெஞ்சிற்
செல்வானைப் பிறவானை யிறவானைத் திருமறைசை சேரெம் மானை
மல்லானை யிவர்வானை மலைமானை யிடத்தானை மணியார் மேரு
வில்லானைத் துதிப்பவரே விரவுபவக் கடல் கடக்கும் விதங்கண்டாரே (5)

[கைக்கிளை-மருட்பா]

மறையா விழியிமைக்கும் வாசமலர்ப் பாத
முறையுநிலம வாடுமல ரொண்டார்-குறையாத
திருமறைக் காட்டில்வாழ் சிற்பர மூர்த்திதன்
மருமலர்ச் சோலை மலையில்
வருமிவ ளணங்கல ளகவிட மானே. (88)

[எண்சீர்-விருத்தம்]

மானேறு மயலகற்றி மருவு மூல மலமதனைக்
கடந்துமணிக் கயிலை மேவி,
வானேறு விபூதியணி தொண்ட ரோடே மருவியுன தடிமை
செயுங்காலமென்றோ,
தேனேறு மலர்க்கண்ட லடவி சூழுந் திருமறைக்
காட்டினிலமருந் செய்ய சோதீ,
யானேறுந் திருக்கொடியா யருளை யெண்ணி யனுதினமும்
பாத்திருப்பே னடிய னேனே. (89)

[பாண்- எழுசீர்- விருத்தம்.]
அடிகண மகிழ்வுட னமரு மறைநக ரதனில்
வருமொரு பாணனீ
படிகொ ணவமதின் மறுகி லரிவையா
பரிவு கொளவிசை பாடவே
யிடியின் மிகுகுர லெவர்கொல் வினவுவ
ரெனவுன் னிசையினை யிகழுவா,
ரிடையின் மிகுதன முடையா தமைவில
கிறைவ ரிசையினை யிசைசெய்வாய். (90)

[மடக்கு- கட்டளைக்கலித்துறை.]

வாயா ரனந்தந் துதிசொலி வாழ்த்தி மணியுறுசே
வாயா ரனந்த சயநன் வகிக்க மகிழ்ந்தவதென்
வாயா ரனந்த வயக்கூற் றுறுமெல்லை வந்துதவு
வாயா ரனந்த வனமறைக் காட்டுறை வானவனே. (91)

[வேனில் கலிநிலைத்துறை.]

வானிற்க ணூர்செம்பொன் மதிவேணி முடியீசா மறைசைப்பதிக்
கானிற்க லந்தென்னை விட்டேகி னார்நெஞ்சு கன்னெஞ்சமோ
வேனிர்க ணுறுகால மிகுமெல்லை யிலதாக மேவுற்றதாற்
றேனிற்கு ளித்திந்த்ர வாசத்தி லுறைகின்ற சிறுகீதமே. (92)

[எழுசீர்-விருத்தம்.]

[எழுசீர்-விருத்தம்.]

போற்றிசெய் தறியே னிருவினை யுடையேன்
பொருந்துதொண் டெனுந்துறை குளிக்க,
வேற்றுதண் ணளியின் பாசந்தொட் டிழிந்தே
இன்பமா முத்தியான் பெற்றேன்,
கீற்றுவெண் மதியோ டாலமுள் ளடக்கிக் கிளர்ந்தெழு
நதிக்கதி பதியாய்த்,
தோற்றிய மறைக்கா னமர்மகோ ததியே
துணையெனக் குனையன்றி யுண்டோ. (98)

[கட்டளைக்கலித்துறை.]

உண்டாலங் கொண்ட புலியை யுமிழ்ந்தன் றுறங்குதற்குப்
பண்டாலங் கொண்டவ னான்முகன் போற்றிப் பணிமறைசை
மண்டாலங் கொண்டருள் வானமணக் கோல மனமகிழக்
கண்டாலங் கொண்ட விழியார் மயல்வினை காணரிதே. (99)

[எழுசீர்-விருத்தம்]

அரிமுன்னாகிய கடவுளர் நாயக னகிலமா ருயிர்களீன் றருளந்
தரிதன் னாயகன் சதுர்மறை நாயகன் றண்பணை சூழ்ந்திடும் வேத
புரிகொ ணாயக னெமையரு ணாயகன் புகழினை மகிழ்வொடு வினவத்
தெரியு நாயக மாமெனக் கொண்டவர் சேருவர் சிறந்தவான் றிருவே. (100)

பீதாம்பரப்புலவர் செய்த மறைசைக்கலம்பகம் முற்றிற்று.

திருச்சிற்றம்பலம்.

---